(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 126.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2026 சனவரி 23, வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன,** சபாநாயகர்

**கௌரவ (டாக்டர்) ரிஸ்வி சாலி**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ (திருமதி) ஹேமாலி வீரசேகர**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ கலாநிதி ஹரினி அமரசூரிய,** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்

**கௌரவ அனுர கருணாதிலக்க,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ கே.டீ. லால் காந்த,** கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்

**கௌரவ ராமலிங்கம் சந்திரசேகர்,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்

**கௌரவ குமார ஜயகொடி,** வலுசக்தி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நலிந்த ஜயதிஸ்ஸ,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ (கலாநிதி) அனில் ஜயந்த,** தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி ஹர்ஷன நானாயக்கார,** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) தம்மிக பட்டபெந்தி,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) உபாலி பன்னிலகே,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) சுசில் ரணசிங்ஹ,** வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

**கௌரவ பிமல் ரத்நாயக்க,** போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ ஆனந்த விஜேபால,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹினிதும சுனில் செனெவி,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ விஜித ஹேரத்,** வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்

கௌரவ **சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

கௌரவ **(கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன,** வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

கௌரவ **நாமல் கருணாரத்ன,** கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **ரத்ன கமகே,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **எரங்க குணசேகர,** நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ **நிசாந்த ஜயவீர,** பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ **மஹிந்த ஜயசிங்ஹ,** தொழில் பிரதி அமைச்சர்

கௌரவ **மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர,** பாதுகாப்பு பிரதி அமைச்சர்

கௌரவ **வசந்த பியதிஸ்ஸ,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை பிரதி அமைச்சர்

கௌரவ **சுந்தரலிங்கம் பிரதீப்,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

கௌரவ **முனீர் முலாபர்,** சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **சட்டத்தரணி சுனில் வடகல,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) ஹங்சக விஜேமுணி,** சுகாதார பிரதி அமைச்சர்

கௌரவ **எரங்க வீரரத்ன,** டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர்

கௌரவ **உபாலி சமரசிங்ஹ,** கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ **ரீ. பீ. சரத்,** வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் பிரதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) நாமல் சுதர்சன,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **அரவிந்த செனரத்,** காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) மதுர செனெவிரத்ன,** கல்வி, உயர் கல்வி பிரதி அமைச்சர்

கௌரவ **நலின் ஹேவகே,** தொழிற் கல்வி பிரதி அமைச்சர்

---

கௌரவ **அஜித் அகலகட**

கௌரவ **அமிர்தநாதன் அடைக்கலநாதன்**

கௌரவ **அபூபக்கர் ஆதம்பாவா**

கௌரவ **ஹெக்டர் அப்புஹாமி**

கௌரவ **சட்டத்தரணி யூ.பி. அபேவிக்ரம**

கௌரவ **(பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம**

கௌரவ **(டாக்டர்) நிஹால் அபேசிங்ஹ**

கௌரவ **(டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா**

கௌரவ **லக்ஸ்மன் நிபுண ஆரச்சி**

கௌரவ **பீ. ஆரியவங்ஷ**

கௌரவ **(டாக்டர்) நஜீத் இந்திக்க**

கௌரவ **எம்.எஸ். உதுமாலெப்பை**

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ (செல்வி) கிருஷ்ணன் கலைச்செல்வி

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்

கௌரவ உபுல் கித்சிறி

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே

கௌரவ கதிரவேலு சண்முகம் குகதாசன்

கௌரவ சமிந்த லலித் குமார

கௌரவ சட்டத்தரணி சரத் குமார

கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்

கௌரவ மனோ கணேசன்

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலூஷா லக்மாலி கமகே

கௌரவ அஜந்த கம்மெத்தெகே

கௌரவ அஜித் கிஹான்

கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ

கௌரவ டி.வீ. சானக

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ திலித் ஜயவீர

கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி

கௌரவ எம். ஏ. எம். தாஹிர்

கௌரவ ஜீவன் தொண்டமான்

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ சுகத் வசந்த த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ தனுர திசாநாயக

கௌரவ சுஜீவ திசாநாயக்க

கௌரவ சட்டத்தரணி சுசந்த தொடாவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ நந்தன பத்மகுமார

கௌரவ அருண பனாகொட

கௌரவ நிமல் பலிஹேன

கௌரவ நிஷாந்த பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து

கௌரவ ஸ்டெபனி பிரனாந்து

கௌரவ கந்தசாமி பிரபு

கௌரவ லால் பிரேமநாத்

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ ரவீந்திர பண்டார

கௌரவ சுதத் பலகல்ல

கௌரவ (டாக்டர்) எஸ். ஸ்ரீ பவானந்தராஜா

கௌரவ ஈ.எம். பஸ்நாயக

கௌரவ சுனில் பியன்வில

கௌரவ (டாக்டர்) சந்தருவன் மதரசிங்ஹ

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க

கௌரவ இம்ரான் மகரூப்

கௌரவ சானக மாதுகொட

கௌரவ ருவன் மாபலகம

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா

கௌரவ தனுஷ்க ரங்கனாத்

கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க

கௌரவ மஞ்சுல சுகத் ரத்னாயக

கௌரவ சுரங்க ரத்நாயக்க

கௌரவ (திருமதி) ஏ.எம்.எம்.எம். ரத்வத்தே

கௌரவ துரைராசா ரவிகரன்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ எம்.எஸ் அப்துல் வாசித்

கௌரவ கஞ்சன வெலிப்பிட்டிய

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ ஆர்.ஜீ. விஜேரத்ன

கௌரவ சட்டத்தரணி பிரியந்த விஜேரத்ன

கௌரவ ருவன் விஜேவீர

கௌரவ தர்மப்ரிய விஜேசிங்ஹ

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ பஸ்மின் சரீப்**

**கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்**

**கௌரவ திலிண சமரகோன்**

**கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர**

**கௌரவ (செல்வி) அம்பிகா சாமிவெல்**

**கௌரவ (டாக்டர்) இளையதம்பி சிறிநாத்**

**கௌரவ தேவானந்த சுரவீர**

**கௌரவ சந்தன சூரியஆரச்சி**

**கௌரவ கிட்ணன் செல்வராஜ்**

**கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்**

**கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி**

**கௌரவ சம்பிக ஹெட்டிஆரச்சி**

**கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர**

**கௌரவ முஹம்மட் பைசல்**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பதவியணிப் பிரதானி மற்றும் பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:— "கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ அவர்கள் 2026 சனவரி 07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய சிறப்புரிமை விடயம் தொடர்பில் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துவதற்கான பிரேரணையொன்று கொண்டுவரப்படலாம்."

**2. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியின் வருடாந்த அறிக்கைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க மற்றும் 2024 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் (திருத்தம்) சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 17(10) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 71(1) ஆம் பிரிவின் கீழ் தொலைத்தொடர்புகள் உட்கட்டமைப்பு வசதிகளை பகிர்ந்து கொள்ளும் ஒழுங்குவிதிகள் தொடர்பில் அப்போதைய தொழில்நுட்ப அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2024 ஓகத்து 07 ஆம் திகதிய 2396/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளைச் சமர்ப்பித்து, அவ்வொழுங்குவிதிகள் டிஜிட்டல் பொருளாதார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2023/2024 ஆம் ஆண்டுக்கான வ/ப கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனியின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** (1) பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளருமாகிய கௌரவ (டாக்டர்) ரிஸ்வி சாலி அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களின் முதலாவது அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ ஹெக்டர் அப்புஹாமி அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட –

(i) 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கைகள்;

(ii) 2021 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை;

(iii) 2022 ஆம் ஆண்டுக்கான துருசவிய நிதியத்தின் வருடாந்த அறிக்கை;

(iv) 2015 ஆம் ஆண்டுக்கான தேயிலை சக்தி நிதியத்தின் வருடாந்த அறிக்கை;

(v) 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை;

(vi) 2022 ஆம் ஆண்டுக்கான தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை;

(vii) 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கைகள்; மற்றும்

(viii) 2023 ஆம் ஆண்டுக்கான அரச பெருந்தோட்ட தொழில்முயற்சி மறுசீரமைப்பு அமைச்சரவை அல்லாத அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ (செல்வி) கிருஷ்ணன் கலைச்செல்வி அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமூலம் தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(4) கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ (செல்வி) கிருஷ்ணன் கலைச்செல்வி அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட–

(i) 2023 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை;

(ii) 2023 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(iii) 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய விளையாட்டு நிதியத்தின் வருடாந்த அறிக்கைகள்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) பூஸ்ஸ, கரதுர, ‟தில்ஹானி” எனும் முகவரியில் வதியும் திரு. ரைட்டின் மாவடவிலகேயினதும் மற்றும் மேலும் இருபத்துநான்கு பேரினதும் 2025.07.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ரத்ன கமகே சமர்ப்பித்தார்.

(2) கண்டியினூடாக, உடஹிங்குல்வல, இல. 102/1 இல் வதியும் திரு. எஸ்.எம்.ஏ.கே. மொலகொடவினது 2025.05.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ தனுர திசாநாயக்க சமர்ப்பித்தார்.

(3) தலவத்துகொட, சாந்திபுர, நான்காம் ஒழுங்கை, இல. 264 டி 1 இல் வதியும் திரு. தேமுனி திலக் த சொய்சா அபேசிரிவர்தனவினது 2025.07.02 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சுனில் பியன்வில சமர்ப்பித்தார்.

(4) அநுராதபுரம், அங்கமுவ, யாய 06, சரக்குகல அருகில் எனும் முகவரியில் வதியும் திரு. எச்.பீ.எஸ்.டி. ஹேரத்தினது 2025.07.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சுரங்க ரத்னநாயக்க சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் சார்பாக துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரேரித்தார்.

(மு.ப. 11.37 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 1.00 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி தலைமை தாங்குவாராக" என சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.27 மணிக்கு கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி தலைமை தாங்கினார்.)

"கௌரவ சுஜீவ திசாநாயக்க தலைமை தாங்குவாராக" என புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப 3.29 மணிக்கு கௌரவ சுஜீவ திசாநாயக்க தலைமை தாங்கினார்.)

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா தலைமை தாங்குவாராக" என கௌரவ ரவி கருணாநாயக்க பிரேரிக்க அதனை கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை அனுவதித்தார். .

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப 3.57 மணிக்கு கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா தலைமை தாங்கினார்.)

(பி.ப. 4.56 மணிக்கு சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் வாசகம்

2 ஆம் பக்கத்தில் 3 முதல் 7 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> ""(ஆ) எவரேனும் சிரேட்ட பேராசிரியர், பேராசிரியர், இணைப் பேராசிரியர், அல்லது சிரேட்ட விரிவுரையாளர் (தரம் I) அப்பந்தி (அ) இன் கீழ் துறைத்தலைவராகத் தெரிவு செய்யப்படுமிடத்தும் மற்றும் அத்தகைய";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் பக்கத்தில் 11 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் மேலும் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"சிரேட்ட பேராசிரியர், பேராசிரியர், இணைப் பேராசிரியர் அல்லது சிரேட்ட விரிவுரையாளர் (தரம் I)";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

2 ஆம் பக்கத்தில் 18 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் மேலும் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"பதிலாக "ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான, உரிய நடவடிக்கைமுறைக்கிணங்க பேரவையினால் பதவியிலிருந்து";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

2 ஆம் பக்கத்தில் 31 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் மேலும் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"ரொருவராக தெரிவுசெய்யப்படுதலாகாது.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும்" என்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் வாசகம்

4 ஆம் பக்கத்தில் 10 முதல் 16 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(தரம் II) இல்லாதிருப்பின், மூதவையினால் தீர்மானிக்கப்பட்ட அதே துறையின் வேறொரு கற்கைப் பகுதியினது சம்பந்தப்பட்ட கற்றல் துறையொன்றிலுள்ள ஒரு சிரேட்ட பேராசிரியர், துறையொன்றிலுள்ள ஒரு சிரேட்ட பேராசிரியர், பேராசிரியர், இணைப் பேராசிரியர் அல்லது சிரேட்ட விரிவுரையாளர் (தரம் I) அத்தகைய தன்மையில் நியமிக்கப்படுதல் வேண்டும் ";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் பக்கத்தில் 23 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் மேலும் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"பதிலாக "என்பதுடன், ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான, உரிய நடவடிக்கை முறைக்கிணங்க பேரவையினால் ";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் பக்கத்தில் 16 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் மேலும் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"ஆட்கள் இல்லாதுள்ளவிடத்தும்".

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும்" என்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்

"சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"திருத்தப்பட்டவாறான சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப் பெறுமாக" என பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமைய சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**6. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம்: பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,—** பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவினால், இன்றைய தினம் பி.ப.2.30 மணிக்கு நடத்தப்பட்ட கூட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் இன்றைய தின ஒழுங்குப் பத்திரத்தின் பொது அலுவல்களில் முதலாம் இலக்க விடயத்தை உடனடுத்து உள்ளடங்க வேண்டிய "இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம்" தொடர்பான விடயம் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27ன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெற வேண்டுமென்பதோடு, சபையின் விசேட அனுமதியுடன் அத்தீர்மானம் இன்றைய தினம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட வேண்டும்.

அதன்படி, பின்வரும் தீர்மானம் பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,—

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41அ (1) (உ) (iii) உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட அரசியலமைப்பு பேரவையின் தற்போதைய அங்கத்தவர்களின் பதவிக்காலம், அரசியலமைப்பின் 41அ (8) (ஆ) உறுப்புரையின் கீழ் 2026.01.19ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நிறைவடைந்துள்ளமையால்;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41அ (1) (உ) (iii), 41அ (4) மற்றும் 41அ (5) உறுப்புரைகளின் கீழ், பிரதம அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய இருவரினதும் இணக்கப்பாட்டின் அடிப்படையில், சபாநாயகரால் பெயர் குறிக்கப்பட்டு, சனாதிபதியால் நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத பின்வரும் ஆட்களை அரசியலமைப்பு பேரவைக்கு பெயரிடுவதை அரசியலமைப்பின் 41அ (5) உறுப்புரையின் கீழ் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுகிறது: —

1. கலுபகே ஒஸ்டின் பெர்னாண்டோ ;

2. பேராசிரியர் வசந்தா செனெவிரத்ன ; மற்றும்

3. உடுநுவர கம்பதிகே ரஞ்சித் ஆரியரத்ன."

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. ஒத்திவைப்பு**: "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்ற சபை முதல்வர் பிரேரித்தார்.

அவ்வேளை, நேரம் பி.ப. 5.30 மணிக்கு மேலாகிவிடவே, பி.ப. 5.40 மணிக்கு சபாநாயகர் இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2026 பெப்ரவரி 03 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.